


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.7.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையும் இந்து குழுமமும் இணைந்து தயாரித்துள்ள நாட்டார் தெய்வங்களின் வரலாறு, வழிபாட்டு முறைகள் மற்றும் பண்பாட்டு முறைகள் ஆகியவற்றை விளக்கிடும் வண்ணப் புகைப்படங்களுடன் கூடிய “olk Deities of Tamil Nadu” என்ற நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், தி இந்து குழுமத்தின் தலைவர் மற்றும் வெளியீட்டாளர் திருமதி நிர்மலா லக்ஷ்மண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத்துறையும் இந்து குழுமமும் இணைந்து தயாரித்துள்ள “ORTS OF TAMIL NADU – A WALK – THROUGH” என்ற சுற்றுலா தகவல் களஞ்சிய நூலை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், தி இந்து குழுமத்தின் தலைவர் மற்றும் வெளியீட்டாளர் திருமதி நிர்மலா லக்ஷ்மண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உத்தரப்பிரதேசம் - ஹத்ராஸ் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு:

# உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும்!

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி!

புதுடெல்லி, ஜூலை 10-

121 பேரை பலி கொண்ட ஹத்ராஸ் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி அளித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராசில் கடந்த 2ம் தேதி நடந்த போலே பாபா என்ற சாமியாரின் ஆன்மீக சொற்பொழிவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் பலியாயினர். இந்த விவகாரத்தில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான தேவ் பிரகாஷ் மதுக்கர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர். தலைமறைவாக உள்ள சாமியார் போலே பாபாவை போலீசார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று வழக்கறிஞர் விஷால் திவாரி என்பவர் உச்சநீதிமன்றம் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கை அவசரமாக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்றும் முறையிட்டார்.

இதையடுத்து, ஹத்ராஸ் சம்பவம் தொடர்பான வழக்கு உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் உறுதி அளித்துள்ளார். இதனால், இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஒன்றிய அரசு நடத்தும் ஆசிரியர் தகுதித் தேர்வு:

# ஆள்மாறாட்டம் செய்த 31 பேர் கைது!

## பீகார் காவல்துறை விசாரணை!

பாட்னா, ஜூலை 10 -

ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கு *Central Teacher Eligibility Test* எனும் தகுதித் தேர்வு ஆண்டு தோறும் நடத்தப்படுகிறது. இத்தேர்வை ஒன்றிய அரசின் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் நடத்துகிறது. இவ்வாண்டுக்கான தேர்வு நேற்று முன்தினம் நாடு முழுவதும் நடைபெற்றது. பீகார் மாநிலம் தர்பங்கா, பெகுசராய், சரண் ஆகிய இடங்களில் உள்ள தேர்வு மையங்களில் போலீசார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது, தேர்வில் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டதாக 5 பெண்கள் உட்பட 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தார்பங்கா காவல்துறை கண்காணிப்பாளர் ஜகனாத் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தேர்வர்களிடமும், 25 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை வசூல் செய்திருப்பதும் விசாரணையில் அம்பலமாகியுள்ளது. ஒன்றிய அரசு நடத்தும் நீட், நெட் உள்ளிட்ட தேர்வுகளில் வினாத்தாள் கசிவு போன்ற முறைகேடுகள் தொடர்ந்து அம்பலமாகி வரும் நிலையில், தற்போது, ஒன்றிய அரசு நடத்தும் ஆசிரியர் தகுதித் தேர்வில் ஆள்மாறாட்டம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### சென்னை மாநகர காவல்துறைக்குப் புதிய ஆணையர் - வரவேற்கத்தக்கது!

# கூலிப் படைகளின் கொட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திடுக!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 10 -

சென்னை பெருநகர காவல்துறைக்குப் புதிய ஆணையராக அருண் பொறுப்பேற்றதற்குப் பாராட்டுத் தெரிவித்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், கூலிப்படை களின் கொட்டத்தையும், ரவுடிக் கும்பலையும் ஒழிக்க வேண்டும் என்று அறிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை பெருநகர காவல்துறைத் தலைவராக (கமிஷனராக) அருண் நியமிக்கப்பட்டுள்ள மாறுதல் நியமனம் பெரிதும் வரவேற்கத்தக்கது.

கூலிப் படைகளின் கொட்டம், ரவுடிகளின் அட்டகாசத்திற்கு முழுதாய்ந்து முற்றுப்புள்ளி வைக்க முயலவேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் எந்த நடவடிக்கைக்கும் தாமதிக்காமல், உடனடியாகத் தீர்க்க மின்னல் வேகத்தில் செயல்பட்டாலும், அரசு இயந்திரம் அதனைப் புரிந்து, அவரது வேகத்திற்கு ஈடுகொடுப்பதில் சுணக்கம் காட்டக் கூடாது!

அதுபோலவே, சட்டம்- ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி.யாக டேவிட்சன் தேவாசீர்வாதம் அவர்கள் நியமிக்கப்பட்டு இருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். மிகுந்த அனுபவம் வாய்ந்தவர் அவர்.

காவல்துறை, உளவுத் துறை போன்றவற்றில் உள்ள கருப்பு ஆடுகளைக் கண்டறிந்து, மிகக் கடுமையான நடவடிக்கைகளை இன்னார், இனியார் என்ற கண்ணோட்டமே இல்லாமல், முதலமைச்சரும், அரசும் செயல்பட்டு நிலைமைகளைச் சீரடையச் செய்யவேண்டும்.

முன்பு சென்னை ஆணையராக இருந்த எப்.வி.அருள் சென்னையில் அப்போது பிரபலமான காட்டன் சூதாட்டத்தை நன்கு வேட்டையாடி அறவே ஒழித்தார்.

அதுபோலவே வால்டர் தேவாரம் அவர்கள் ரவுடி ராஜ்ஜியத்திற்குத் தமது துணிச்சலான நடவடிக்கைகள்மூலம் முழுதும் முற்றுப்புள்ளி வைத்தார்.

சிறைக்கூடங்களில் கொலைக்கான சதிக் கிடங்குகளாக இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசு, சிறைக்குள்ளேயும் நன்கு ஆராய்ந்து உரியத் தீர்வு காணப்படவேண்டும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.